# தமிழ் இலக்கியங்களில்
## சமயமும் சமூகமும்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் சு. இராமலிங்கம்
திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XXII + 488 = 510 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXII + 488 = 510 |
| Prize | : | **Rs. 400/-** |

168. **திருமதி. மாலதி பழனியப்பன்** *879*
நகர வயிரவன் கோயில் சிற்பங்களும் - ஓவியங்களும்

169. **முனைவர் இரா. மணிமேகலை** *883*
சுந்தரரின் பாடல்களில் வாழ்வியல் அகச்சான்றுகள்

170. **முனைவர் மு. ருக்மணி** *889*
காசிஆனந்தனின் நறுக்குகளில் சமூகஉணர்வுகள்

171. **முனைவர் ச. அரிச்சந்திரன்** *894*
சோளகர் தொட்டி புதினம் காட்டும் பழங்குடிச் சமூகமும் சமயமும்

172. **திரு. மு. சதீஸ்குமார்** *900*
உலக அமைதிக்கு மணிமேகலை காட்டிய வழி

173. **மருத்துவர் இரா. செல்வராஜ்** *905*
தமிழ் இலக்கியத்தில் ஆநிரைகளும் இடையர் சமூகமும்

# 169. சுந்தரரின் பாடல்களில் வாழ்வியல் அகச்சான்றுகள்

**முனைவர் இரா. மணிமேகலை**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முகவுரை

தமிழகத்தின் மிகத் தொன்மையான வழிபாடாக சிவனிய நெறி விளங்குகிறது. இச சமய நெறியினை எடுத்துக்காட்டும் இலக்கியச் செல்வங்களும். திருக்கோயில் கலைச்செல்வங்களும் தென்னகத்தில் நிறைந்து காணப்படுகின்றன. சைவசமயக் குரவர்கள் நால்வர்கள் அருள்பழுத்த தமிழ்ச்சுவைப் பாடல்களைத் தலந்தோறும் பண்ணார்ந்த இசையாக அளித்துள்ளனர். அவர்களுள் தோழமை நெறிக்குச் சான்றாக விளங்கும் சுந்தரரின் அருள்வாழ்வு பெருமாட்சிமையுடையது. பன்னிரு திருமுறைகளுள் ஏழாம்திருமுறை சுந்தர் இயற்றியது ஆகும். அதனைத் "திருப்பாட்டு" என்று குறிப்பிடுவார். பதிகப் பெருவழிக்குப் பெருந்துணையாக விளங்கும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெரியோர்கள் இட்டுத் தந்த செம்மை நலம் மிக்க வழியில் சுந்தரரின் திருப்பாட்டும் நடைபோடுகின்றது. சுந்தரர் தேவாரப்பாடல்களில் இடம்பெறும் அகச்சான்றுகள் குறிக்கும் செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகிறது.

## சுந்தரர் தேவாரம்

சுந்தரரின் வரலாறு தமிழகத்தின் சைவ சமய அடியார்களின் வரலாற்றைப் பதிவதற்கான அடித்தளமாக அமைகின்றது. அவரது திருப்பாடல்கள் அவரின் சொந்த வரலாற்றைக் குறிப்பதன்றித் தமிழக சமய வரலாற்றைத் தொகுக்கும் நிலைக் களனாகவும் இருக்கின்றது. சைவ புண்ணியக் கண்கள் இரண்டு என்று திருஞான சம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் சேக்கிழார் உரைக்கின்றார். அவ்விருவரின் திருப்பதிகங்களைத் துதித்து வழிபட்டுப் போற்றியதுடன் அப்பெருமக்களின் வழியிலேயே தாமும் பாடல்களைப் புனைந்தார் சுந்தரர். அதனைத் தம் பாடலில்,

> ***"நல்லிசை ஞானசநம்பந்தனும் நாவினுக்கரையனும்***
> ***பாடிய நற்றமிழ் மாலை***
> ***சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானை"*** *(67-5)*